REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆனி 20உ வியாழன் (4—7—57) ★ ★ வெளியூர்: ஆனி 21உ வெள்ளி (5—7—57) [இதழ் 17

புதுமுறை 'இன்புளுயன்சா' பரவுகிறது!

சிதபேதி ரூபத்தில் புது முறை 'இன்புளுயன்சா' ஒன்று ஜப்பான் நாட்டில் பரவி வருவதாகவும், இதுவரை 8,97,000 பேர் இந்த வியாதியினால் பீடிக்கப்பட்டிருக்கிருர்கள் என்றும் 1,056 பேர் வியாதிக்குப் பலியாகியுள்ளனர் என்றும், 'டெர்ராமைசின்', 'ஆரோமைசின்' போன்ற அற்புத மருந்துகளுக்கும் இந்த வியாதி கட்டுப்படவில்லை என்றும் மேற்கு ஜப்பான் டாக்டர்கள் தெரிவித்திருக்கின்றனராம்!

மிதிக்கும் காலைப் பொறுத்ததே குற்றமும் குணமும்!

குற்றஞ்சாட்டியோரே நிறையக் குறை கூறும் விந்தை!

ஆரத்தில் இழையோடும் நூல் போல நிதி மந்திரியின் உரையில் காணப்படும் உண்மை

வடக்கு வாழ்கிறது — தெற்கு தேய்கிறது

சட்டசபையில் மு. கருணாநிதி முழக்கம்

சென்னை, ஜூலை 4—

"1957—58-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்கள் இம்மன்றத்தில் வெளியிட்டு ஆதரவு கோரியிருக்கிருர்கள். அதுபற்றிய என் கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அறிக்கையை ஆதரித்துப் பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சியினராகிய நாங்கள், 'எதையெடுத்தாலும் குற்றம் சொல்லுகிரேம்; கால் பட்டாலும் குற்றம் கைபட்டாலும் குற்றமென்கிரேம்' எனக் குறிப்பிட்டார்கள். 'கால்பட்டால் குற்றமா இல்லையா' என்பது, படுகிற காலைப் பொறுத்திருக்கிறது. குழந்தையின் பாதம் படுவதை குற்றமென யாரும் கூறிடார். குஞ்சரபாதம் படுவதை (யானைக் கால்) அனுமதிக்க முடியுமா என்ன? எதிர்க்கட்சியினர், குறை கூறுகிருர்கள் எனக் குற்றம்சாட்டி, 'அடாணு' ராகத்தில் பேச்சை ஆரம்பித்தவர்கள்! அவர்களும் தங்கள் குறைகளை நிறையக் கூறி, 'முகாரி'யில் முடித்தார்களே தவிர, யாரும் 'மோகன'ராகத்தில் முடிக்கவில்லை."

—என்று, தோழர் மு. கருணாநிதி அவர்கள், நேற்றைய சட்டசபைக் கூட்டத்தில், வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்மீது பேசுகையில் குறிப்பிட்டுத் தொடர்ந்து பேசியதாவது :—

"புதிய வரிகள் போடாததால் எதிர்க்கட்சியினர் ஏமாற்றமடைந்து சோர்ந்து விட்டார்கள் என்றும் பெருமை பேசப்பட்டது இது எவ்வாறு இருக்கிறதெனில், '**நேற்றிரவு ஒரு வீட்டுக்குத் திருடப் போவதாகத் திட்டமிட்டேன்; வீட்டுக்காரப் பயல் இரவெல்லாம் விழித்திருந்தான்; நான் திருடப் போகவில்லை; வீட்டுக்காரன் சரியானபடி ஏமாந்தான்**', என்று திருடன் பெருமையடித்துக் கொள்வதுபோல இருக்கிறது!

"நிதிமந்திரி அவர்கள் பற்றுக்குறைத் திட்டத்தை அறிவித்து, 'சென்ற ஆண்டு ஐந்தாண்டுத் திட்டத்துக்காகப் பெரும் அளவில் செலவு செய்ய நினைத்திருந்தோம்; வசதி வாய்ப்புகள், இன்னபிற நிலைகள் சரியாக அமையாததால் ரூ. 29 கோடி குறைந்த செலவில் தான் குறைந்த திட்டங்களைக் காண முடிந்தது—அதுபோலவே, இந்த ஆண்டும் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதில் நிலைமை மோசமாகவே இருக்கிறது; சில முக்கியமல்லாத திட்டங்களை ஒத்திப் போடவும் வேண்டியிருக்கும்; ஆனால் ஒன்று; புதுவரிகள் இல்லை—பழைய வரியில்தான் மாறுதல்' என அறிவிக்கிறது, அமைச்சரின் வரவு செலவுத் திட்டம்!

"வெளியூர் சென்ற கணவன் என்ன நிலையில் வருவானே என எதிர்பார்த்துக் கதவோரத்தில் நிற்கும் காரிகையிடம், 'உனக்கு மத்தாப்புசேலை, மரகதமணி, மல்லிகைப்பூமாலை வாங்கி வரவில்லை; அதுமட்டுமல்ல—உன்னை இனிமேல் அடிப்பதற்கு புதிய கம்பு வாங்காமல், தற்காலிகமாக பழைய கம்பையே பழுது பார்த்து வந்திருக்கிறேன்' எனச் சொன்னால், மகிழ்ச்சியா பிறக்கும் மனைவிக்கு! இந்தக் கதைப் போலத்தான் அமைந்திருக்கிறது நிதிநிலை அறிக்கையில் காணப்படும் திட்டமும், பழைய வரி மாறுதலும்!

"கிராமக் கர்ணம், முன்சீப், பணியாளர்களுக்கு 'கிராக்கிப் படி'யை சிறிது உயர்த்த முன் வந்திருப்பது பாராட்டக்கூடியது என்ருலும், அதுவும், அழுத குழந்தைக்கு அழுகல் வாழைப் பழத்தை அளித்ததுபோன்ற அதிருப்தியோடுதான் வரவேற்கப் படும்.

"முந்திரி சாகுபடிக்கு ரூ. 4 இலட்சம் திட்டத்தில் ஒதுக்கி விட்டதாலேயே, 'தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது' என்ற குற்றச்சாட்டை சமாளித்துவிட்டதாக நிதிமந்திரி கருதுவாரானல், அதற்காக மிகமிக வருந்துகிறேன். 'சிந்திரி—முந்திரி' எனத் தேர்தல் நேரத்தில் நாங்கள் பேசியதை கனம் மந்திரி இங்கே சுட்டிக்காட்டினர், 'சிந்திரித் தொழில் சிறக்கிறது வடக்கே—முந்திரித் தொழிலும் சிதைகிறது தெற்கே!'—என ஒலித்தன, எங்கள் சுவரொட்டிகள்! 'இந்தச் சுவரொட்டிகளால் என்ன ஆகும்?' என அங்கலாய்த்தவர்களுக்குப் பதில் அளிக்கும் வகையிலே, முந்திரித் தொழிலுக்கு ரூ. 4 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது; இது எங்களைத் திருப்தி செய்யக்கூடியது என நிதிமந்திரி குறிப்பிட்டார். 'முந்திரித் தொழிலும் சிதைகிறது' என்பதில் உள்ள 'உம்'—பெரிய தொழில்கள் மட்டுமல்ல; சிறிய தொழில்களும் சீரழிகின்றன—என்பதையே சுட்டிக்காட்டும்!

"திட்டங்கள், திட்டங்கள் என எதற்கெடுத்தாலும் பேசப்பட்டு, அதற்கென எல்லாத்துறைகளிலும் வரி வசூலிக்கப்பட்டு, மத்திய சர்க்காரின் பிடியிலே மக்கள் மென்னி நெரிக்கப்பட்டு வாடுகிற நேரத்தில், 'நாமும் வரிபோட்டால் முற்போக்குக் கட்சிகளின் எதிர்ப்பு பலமாகுமே' என மிரண்டுதானே என்னவோ, மாநில சர்க்கார், தற்காலிகமாக வரி போடுவதில்லையெனக் கூறியிருக்கிறது. ஆயினும் ஒன்றைக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

"வள்ளுவர் குறளில்,

'வேலொடு நின்ருன் இடு
என்றது போலும்
கோலொடு நின்ருன் இரவு'—

'மக்களிடம் நிர்ப்பந்தம் செய்து பொருளைப் பெறுகிற கோலுடை அரசன், வேலொடு நின்று பயணம் நடத்துகிற மக்களிடம் கொள்ளையடிக்கிற கொடியவனுக்கு ஒப்பாவான்,' என்பது கருத்து.

"இப்போது, ஆங்கிலேயர் காலத்தில் திட்டமிடப்பட்டு இரண்டாம் உலகப் போரினல் நிறுத்திவைக்கப்பட்டு அண்மையில் திறக்கப்பட்ட கொள்ளிடம் பாலத்தில் வசூலிக்கப்படும் சுங்க வரி, 'வேலொடு நின்ருன் இடு என்றது போலும்,' என்ற குறளைத்தான் நினைவுபடுத்துகிறது என்பேன்.

"பொதுவாக வரவு-செலவுத் திட்டத்தில், ஆரத்தின் இடையே இழைந்தோடும் நூலைப்போல, அறிக்கை முழுதும் காணப்படும் உண்மையொன்றுண்டு; அது தான்—'மாநில சர்க்கார், எல்லாவற்றுக்கும் மத்திய சர்க்காரை எதிர்பார்க்கிறது,' என்பதாகும்.

"எதையும் அறுதியிட்டு உறுதியாகக் கூறமுடியாமல் தேங்கித் தேங்கி வரும் அமைச்சரின் வாசகங்களைக் காண்போம்:—

'தேசியத் தொழில் அபிவிருத்திக் கார்ப்பரேஷன், சேலத்தில் உள்ள மூலக் கனிப் பொருள்களைக் கொண்டு இரும்பு உருக்கும் ஒரு தொழிற்சாலையை நிறுவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.'

"'எதிர்பார்க்கப்படுகிறது,' என்ற ஏக்கம் கலந்த வாசகம் வெளிப்படுவானேன்? 'வடக்கு வாழ்கிறது—தெற்கு தேய்கிறது,'—அதனால்தான்!

'மேட்டூரில் காகித ஆலை அமைக்கும் விஷயம் ஆலோசனையில் இருந்துவருகிறது.'

"அமைக்கப்படாமல், ஆலோசனையிலேயே இருப்பானேன்! 'வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது' அதனால்தான்!

'செயற்கைப் பட்டு நூல் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை பவானி சாகரில் நிறுவப் படலாம்.'

"நிறுவப்படும் என்று 'டும்' வருவதற்குப் பதில், 'படலாம்' என்று 'லாம்' வருவானேன்? வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது—அதனால்தான்!

'பிராட்கேஜ் பெட்டிகளுக்கென தொழிற்சாலையொன்றும் நிறுவப்படலாம்.'

'டி. ஐ. சைக்கிள் ஸ்தாபனம், சைக்கிள் உற்பத்தியைப் பெருக்க, அதன் அளவை அதிகரிக்க வேண்டுமென்று இந்த அரசாங்கம் யோசனை கூறியுள்ளது; அது இப்போது பரிசீலனையில் இருக்கிறது.'

'உயர்தரத் தொழில் கல்வி நிலையம் நான்கில் ஒன்றை, சென்னை நகரில் கிண்டிப்பகுதியில் அமைப்பதால் ஏற்படக் கூடிய பல்வேறு அனுகூலங்களை நாம் அழுத்தமாய் எடுத்துக் கூறியுள்ளோம்; சாதகமான முடிவு விரைவில் கிடைக்குமென எதிர்பார்க்கிரேம்.'

(4-ம் பக்கம் பார்க்க)

'தாழ்த்தப்பட்டோருக்கு என்ன செய்தீர்?'

'சலுகைகள் போதாது' என்று சட்டசபையில் கழக உறுப்பினர்கள் முழக்கம்

சென்னை, ஜூலை 4—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக வீடுகட்டித்தர நபருக்கு ரூ. 750 செலவிடப்படுகிறது என்றும், ரூ. 550 மானியமாகத் தரப்படுகிறது என்றும், ரூ. 200 அவர்கள் உழைப்பின் மூலம் தரப்படுகிறது என்றும் அமைச்சர் கூறினர்.

1957—58-ல் தாழ்த்தப்பட்டோருக்கு வீடுகட்டித்தர ரூ. 80,45,000 செலவிடப்பட்டுள்ளதாம்.

1957—58-ல், மொத்தம் 3,525வீடுகள் கட்டித்தரப்படுமாம்.

க. அன்பழகன் :— *"சேரி என்றால் சேர்ந்து வாழ்தல் என்று பொருள்; எனவே, மற்றவர்களுடன் கலந்து வாழும் தன்மையில் வீடுகள் கட்டித் தரப்படுமா ?"*

அமைச்சர் :—'தக்கபடி இடம் கிடைத்தால் அவ்வாறு செய்யக் கூடும்.'

ஏ. கோவிந்தசாமி:— *"வீடுகள் கட்டிக்கொள்ளத் தரப்படும் தொகை போதவில்லை என்று கருதப்படுவதால் அதை உயர்த்தும் நோக்கம் உண்டா?"*

அமைச்சர்:—'கிடையாது; உதவி எல்லோருக்கும் கிடைக்குமாறு செய்யவேண்டும்.'

ஏ. வி. பி. ஆசைத்தம்பி:— *"ஆதி திராவிடர்களுக்குக் கிராமங்களில் செய்து தரப்படும் வசதி நகரத்திலும் செய்யப்படுமா? மற்ற இடங்களில் வாழும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் தரப்படுமா?"*

அமைச்சர்:—'முதல்தரப் பஞ்சாயத்துப் பகுதிகளுக்குத் திட்டத்தை விஸ்தரிக்கும் நோக்கம் இருக்கிறது.'

ஏ. கோவிந்தசாமி:— *"தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டித்தர கட்டாய முறையில் நில ஆர்ஜிதம் செய்யப்படுமா?"*

அமைச்சர்:—'அரசாங்கம் அது பற்றி ஆராய்ந்து வருகிறது.'

சத்தியவாணிமுத்து :— *"வீடு கட்டித் தரும் திட்டத்துடன் மேலும் ஆதி திராவிடர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் திட்டமுண்டா ?*

அமைச்சர் :— பல்வேறு திட்டங்கள் அமுலில் இருக்கிறது.

சந்தானம் :— *"சேரியை—'அரிசன காலனி' என்றழைப்பதால் மட்டும் தாழ்த்தப்பட்டோர் நிலை உயர்ந்துவிடுமா?"*

அமைச்சர் :— 'இந்தக் கேள்வி வேடிக்கையாக இருக்கிறது; கேள்வி கேட்ட உறுப்பினரின் நோக்கத்தையே சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.'

நாளை!

சட்டசபையில் வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்ட தோழர்கள் க. **அன்பழகன்**, களம்பூர் - **அண்ணாமலை** முதலிய கழக உறுப்பினர்களின் பேச்சுக்கள் முழு விவரம் நாளை இதழில் வெளிவரும்.

நம் நாடு
தி. மு. க. தின இதழ்
ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 4—7—57 வியாழன்

பிடிவாதப் போக்கு!

அகிலமெங்கும் அமைதி நிலவ வேண்டும்!

அணு ஆயுத சோதனைகளைத் தடைசெய்ய வேண்டும்!

ஆயுதக்குறைப்பு ஏற்பட வேண்டும்!

மூன்றும் உலகப்போர் மூளக்கூடாது!

இப்படி எல்லாம் உலக அரங்கில் அடிக்கடி பேசப்படுகிறது. அறிஞர்கள், பெரிய தலைவர்கள் எல்லாம் அடிக்கடி இது குறித்து அரியபல யோசனைகளைக் கூறிவருகிறார்கள். ஆனால் போர்வெறி கொண்ட வல்லரசுகள், ஆக்கிரமிப்பில் நம்பிக்கையுள்ள நாடுகள், பிறரை அடிமையாக்கி சுரண்டி வாழவேண்டும் என்ற இலட்சியம்கொண்ட தலைவர்கள், அந்த யோசனைகளை எந்த அளவிற்கு ஏற்று ஆக்கப்பணியில் ஈடுபடுகிறார்கள் என்பது சந்தேகத்திற்கிடமாக உள்ளது.

ஆயுதக்குறைப்புப்பற்றி பல நாடுகள் பேசுவதை நாம் பல முறை கேட்டுக்கேட்டு சலித்துபோன பல்லவியேயாகும். இதைப்பற்றி பேசுகின்ற நாடுகளுக்கிடையே முதலில் நேசமனப்பான்மை இல்லை என்பது உலகறிந்த உண்மையாகும். ‘போர் கூடாது’ என்று வாய்விட்டுப் பேசும் நாடுகள், எப்போதும்—எந்த நேரத்திலும் உலகப் போரை ஆரம்பிக்கக்கூடிய நிலையில் இருந்துகொண்டு—தன்னைத்தானே தயார்படுத்திக்கொண்டு — விஞ்ஞானத்தை அழிவு வேலைக்குப் பயன்படுத்திக்கொண்டு - நவீன ஆயுதங்களைக் கண்டுபிடிக்கும் நாசவேலையில் ஈடுபட்டுக்கொண்டுதான் ‘சமாதான விரும்பி’களாக மக்கள்முன் காட்சி தருகின்றன என்பது, எவரும் தவறெனக் கூறமுடியாத உண்மையாகும்.

வல்லரசுகளின் போக்கை, கடந்த பல ஆண்டுகளாகக் கவனித்து வந்தவர்கள், ஆயுதக் குறைப்பு பற்றி ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகள் ஒப்புக்கொள்ளாத வகையில் தந்திரத்தைக் கையாண்டு உடன்பாடு செய்துகொள்ள மிகுந்த அக்கறை கொண்டதாக செயல்பட்டுள்ளன என்பதை, இப்பிரச்சினையில் ஏற்பட்டுவரும் தாமதத்தைக்கொண்டும், இந்நாடுகளிடையே நிலவிவரும் போட்டி மனப்பான்மையைக் கொண்டும் முடிவு செய்வர் என்றே கருதுகிறோம்.

இன்று உலக அரங்கில், ஒரு புறம் ஆயுதக் குறைப்பு பற்றிய பேச்சும், மற்றொரு பக்கத்தில் புதிய ஆயுதச் சோதனைகளும் நடைபெற்றுக் கொண்டுதான் வருகின்றன. உலக அறிஞர்கள் கண்டித்தும், சமுதாயம் சீரழியும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்தும் வல்லரசுகள்தொடர்ந்து பிடிவாதமாக நாசம்விளைவிக்கும் சோதனைகளில் தீவிரம் காட்டுவதை எண்ணிப்பார்க்கும்போது பல உண்மைகள், விஷயமறிந்தவர்களுக்குப் புரியாமல் இருக்காது.

‘அணுசக்தியை ஆக்க வேலைக்குப் பயன்படுத்த வேண்டும்’ என்று விஞ்ஞான மேதைகள் குரலெழுப்பியும்கூட வல்லரசுகள்பிடிவாதமாக நாகரிகமற்ற முறையில், அதனை நாசவேலைக்குப் பயன்படுத்துவது, மனப்பூர்வமாக உலக அமைதியைப் பேணி வளர்க்க வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டவர்களுக்கு நிச்சயம் வியப்பையும் வேதனையையும் தரும் என்பதில் மாறுபட்ட கருத்து நிலவ வழியில்லை.

உட்பகையும், வெளி உறவும் கொண்டே இன்று உலக நாடுகளில் ஒரு சில, அபாய சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றன என்பதற்கு அடிக்கடி யுத்தத்தைப் பற்றிய அவைகளின் பேச்சுக்களும், மிரட்டல்களும், வெறிச் செயல்களுமே போதிய ஆதாரமாகும்.

பகைமையை நீக்கி, கடந்த கால சம்பவங்களை மறந்து பாசத்துடனும் நேசத்துடனும் உலக நாடுகள் வாழக்கூடும் என்று நினைப்பதற்கு இந்தச் சூழ்நிலையில் சாதாரண அறிகுறிகள்கூடத் தென்படவில்லையே என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.

இப்போது லண்டனில், ‘காமன்வெல்த்’ நாடுகளின் பிரதமர்கள் கூடி கலந்துபேசி வருகின்றனர். இந்த மாநாடு இத்துடன் எட்டாவது முறையாக கூட்டப்பட்டதாகும். இதில் அங்கம் வகிக்கும் நாடுகள், எந்த நோக்குடனும் எந்த நிலையிலும் கலந்துகொள்ளுகின்றன என்பதும், இந்த நாடுகளுக்கிடையே எந்த அளவிற்கு ஒற்றுமை நிலவுகிறது என்பதும் தெரிந்த ஒன்றாகும்.

இந்த மாநாட்டில் அணு குண்டு, நீர்வாயுக் குண்டுகளை சோதனை செய்வதை நிறுத்த வேண்டும் என்ற முக்கியப் பிரச்சினையைப் பற்றியும் பேசப்படுகிறதாம்.

இந்த மாநாட்டில் இந்தியப் பிரதமரும், ‘பஞ்சசீலம்’ பற்றி வல்லரசுகளின் பாராட்டைப் பெற்றவருமான பண்டித நேருவும் கலந்துக்கொண்டுள்ளார்; அவர், ஆயுதக் குறைப்புக்கு முதலில் அணுகுண்டு சோதனைகளை நிறுத்துவது தான் வழியாகும் என்று யோசனை கூறியுள்ளார்; ‘அதுவே ஆயுதக் குறைப்புக்கு முதல் கட்டம்’ என்றும் பேசியுள்ளார்.

ஆயுதக்குறைப்பு மாநாட்டில் ரஷ்யாவிற்கும், அமெரிக்காவிற்கும் ஏற்பட்டுள்ள கருத்து வேற்றுமை, எந்த அளவிற்கு ஆயுதக் குறைப்புப்பற்றிய உடன்பாட்டிற்கு வழிகாண இயலும் என்பதில் சந்தேகம் நிலவுகிறது. ‘அணு சோதனைகள், குறைந்தது மூன்றாண்டுகளுக்குக் கூடாது’ என்று ரஷ்யா கூறியுள்ளது; இந்தக் கால வரம்பை குறைக்க வேண்டும்’ என்று அமெரிக்கா கூறுகிறது; பிரெஞ்சு, ‘உடன்பாடே கூடாது’ என்ற நிலையில் உள்ளது.

இந்த நிலையில், உலகம் போற்றும் தலைவர்—எங்கும் செல்வாக்கு உள்ளவர் என்றெல்லாம் போற்றப்படும் பண்டித நேரு, தனது செல்வாக்கைப் பயன்படுத்தி உலக சமாதானத்திற்கும், அவருடைய ‘பஞ்சசீல’க் கொள்கைக்கும் ஆதரவு தேடுவார் என்றே நம்புகிறோம். இதைவிடுத்து, வெறும் ‘வாய்ப்பந்தல்’ போட்டுப் பயனில்லை என்றே கருதுகிறோம்.

சென்னை சர்க்கார் இலாகாக்களில் பணம் வீண் விரயம்!

‘முறை தவறிய’ கணக்குகளால் பெருமளவில் நஷ்டம்

தணிக்கைக் குழு அறிக்கை தரும் தகவல்

சென்னை, சூலை 3—

பசி, பட்டினி, பிணி ஆகியவற்றின் கொடிய பிடியினின்று தப்பித்துக்கொள்ளும் வகையில்லாமல் தவிக்கின்ற இந்த நாட்டு மக்கள்மீது வரி விதித்து, அவர்களைக் கசக்கிப் பிழிந்து பறிக்கின்ற கோடிக்கணக்கான பணம் எந்த அளவுக்குப் பாழடிக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றிய ஒரு விவரத்தை, சென்னை மாநில சர்க்கார் தணிக்கைக் குழு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று தெள்ளத் தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறது.

சென்னை மாநில சர்க்காரைச் சேர்ந்த இலாகாக்கள் அனைத்திலும் பணம் வீணாக விரமாக்கப்பட்டுவிட்டிருக்கிறது. குறிப்பாக மாநில விவசாய இலாகாவினைச் சேர்ந்த ஒரு எஞ்சினீயரிங் ஸ்டோரின்கொடுக்கல் வாங்கல் கணக்குகளை எல்லாம் கடந்த 1950 முதலே சரியான முறையில் வைத்துக்கொள்ளாததின் விளைவாக, சர்க்காருக்குப் பெருத்த நஷ்டத்தை விளைவிக்கும் அளவிற்கு மிகப்பெரும் அளவில் பணம் பாழடிக்கப்பட்டிருக்கிறதாம்!

இந்த இலாகாவில் நடைபெற்றுள்ள பல ஒழுங்கீனங்களை தனித்தனியே அந்தக் கணக்கு அறிக்கை வெளியிட்டிருக்கிறது; அதன் விவரமாவது :—

“சேமிப்பு பொருட்களான எண்ணெய், எஞ்சின்கள், பம்பு செட்டுகள் போன்ற சாதனங்களில் காணப்படும் பற்றாக்குறை சாதனங்களின் விலை மதிப்பு ரூ. 66,386.”

“இன்னொரு இலாகாவிற்கு மாற்றப்பட்ட ஜி. ஐ. பைப்புகளின் எண்ணக்கை 1,602 அடிக்குப் பதிலாக 5,602 அடி என்று எழுதப்பட்டிருக்கிறது. அதிகப்படியாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் ரூ. 15,625 பெறுமான 4,000 அடி பைப்புகள் பற்றி எவ்விதமான கணக்கும் காட்டப்படவில்லை.

இதுபோலவே, கடந்த 1953ல் கப்பல் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியில் பெரும் பற்றாக்குறை காணப்படுவதாகவும், அதன் மதிப்பு ரூ. 1,92,151 என்றும், அவ்வறிக்கையில் காணப்படுகிறது.

மேலும், 1949ல், மாவட்ட விநியோக அதிகாரி ஒருவரிடமிருந்து இன்னொரு மாவட்டக் கலெக்டர் ரூ. 1,05,380 பெறுமான 320 டன் அரிசி வாங்கி, அதை மத்திய கூட்டுறவுச் சங்கம் ஒன்றுக்குக் கொடுத்திருந்ததாகவும், ஆனால் அந்தப் பணம் பல ஆண்டுகளாகப் பெறப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் அதே கூட்டுறவுச் சங்கத்தின் 1954-ம் ஆண்டுக் கணக்கு விவரப் பரிசீலனையின்போது, 1947—48-ல் விற்பனை செய்யப்பட்ட அரிசி விலையான ரூ. 1,23,406 சர்க்காருக்குச் செலுத்தப்படாமல் விடப்பட்டிருப்பது தெரியவந்ததாம்.

விடப்பட்டுப் போன இத்தொகையைத் திரும்பப் பெறுவதற்கு சில மாறுதல்களைச் செய்த பிறகும்கூட, இறுதியில் சர்க்காருக்கு ரூ. 75,000 நஷ்டம் ஏற்பட்டதாக வெளியிடப்பட்டிருக்கிறது.

விவசாய இலாகாவைப் போலவே, ரெவினியூ இலாகாவிலும் இதுபோன்று பல ஊழல்களும் அதனால் பெரும் நஷ்டமும் ஏற்பட்டிருக்கிறது.

ஒரு மாவட்ட பொருளகத்தில் வேலைபார்த்த ஒரு குமாஸ்தா ஆறு வருட காலத்திற்கு அதிகமாக ரூ. 3,25,137-க்குத் தப்புக் கணக்குகள் வைத்திருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

கடந்த 1948-ல், ஒரு குறிப்பிட்ட கப்பல் கம்பெனிக்கு சர்க்கார் தந்திருந்த உத்திரவாதத்தின் பேரில், இரண்டு தடவைகள் முறையே ரூ. 4.23.100; ரூ. 1,10,400 கடன் தந்திருந்ததாம். பின்னர் அந்தக் கம்பெனி முதன்முதலாக ரூ. 76,215 மட்டுமே சர்க்காருக்குத் திருப்பிக் கொடுத்திருக்கிறது; அத்துடன் அந்தக் கம்பெனியும் மூடப்பட்டு விட்டது. எனவே, சர்க்கார், அந்தக் கம்பெனியின் சொத்துக்களை எல்லாம் பறிமுதல் செய்து, அவற்றை விற்பனை செய்து, அந்தக் கம்பெனிக்குத் தான் செய்த செலவு, கொடுத்த கடன் தொகை அனைத்தையும் பெற்ற பின்னரும்கூட அத்தொகையில் ரூ. 3,27,669 துண்டு விழுந்திருக்கிறது என்றும் இந்த விவகாரத்தில் சர்க்காருக்கு முடிவாக ஏற்பட்டிருக்கிற நஷ்டம் எவ்வளவு என்பது இனிமேல் தான் கணக்கிடப்பட வேண்டும் என்றும் அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை-ஆந்திர எல்லைப் பிரச்சினை தீருமா?

சென்னை, ஜூலை 3—

சென்னை - ஆந்திர மாநிலங்களுக்கிடையே உள்ள எல்லைத் தகராறுகளைத் தீர்ப்பதற்கு மத்திய அரசாங்கம் நியமித்த திரு. படாஸ்கரின் தீர்ப்பு, திட்டமிட்டவாறு 10 நாட்களுக்கு முன்னரே அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும்; ஆனால், அந்தத் தீர்ப்பு இன்னும் மத்திய அரசாங்கத்திடம் தரப்படவில்லை என்று தெரியவருகிறது. எப்போது தரப்படுமென்று அதிகாரபூர்வமாக தெரியப்படுத்தவும் இல்லையாம்!

மத்திய உள்நாட்டு அமைச்சர் பந்த், மண்டலக் குழுவிற்குத் தலைமை தாங்க இந்தத் திங்கள் 11-ந் தேதி இங்கு வருகையில் அநேகமாக அவருடைய தீர்ப்பு தெரியவரும் என்று ஒரு சிலர் கருதுகின்றனர்.

தென் மண்டலக் குழு

சூலை 11-ல் கூடுமாம்

சென்னை, சூலை 3—

மாநிலங்களுக்கு இடையே நல்லுறவு நீடிக்கவும், ஆக்கவேலைகளுக்கான வழிவகைகள் காணவும் தென் மண்டலத்திற்கு ஒரு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது தெரிந்த ஒன்றாகும்.

இந்தக் குழுவில் கேரளம், சென்னை, ஆந்திரம் இடம் பெற்றுள்ளன.

இந்தக் குழுவின் கூட்டத்தில் 1957—58-ம் ஆண்டிற்கான அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றி ஆராயவும்,மாநிலங்களுக்கிடையே பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்புப் பெறவும் திட்டமிடப் பட்டுள்ளது. ஒற்றுமையை வளர்க்கவும், நாட்டின் முன்னேற்றத்திற்கு ஆக்கம் தேடவும் குழு, வழிவகைகளைக் கண்டறியுமாம்.

இந்தக் குழுவிற்கு சென்னை நகர சபை வரவேற்பளிக்கத் தீர்மானித்துள்ளது.

மற்ற மண்டலங்கள் கூடி பல முன்னேற்றப் பாதைகளை அமைத்துக்கொண்ட பின்னர், இந்தத் தென் மண்டலக் குழு தாமதமாக செயல்படத் துவங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியப் பேரரசின் இரண்டாவது திட்ட அலங்கோலம்

‘தர்பார்’ முறையில் தீட்டப்பட்டதால் பணத்திற்குத் தவிக்கும் அவலநிலை

முன்னைய மதிப்பீட்டுக்குமேல் ‘தொகை’ உயருகிறது

புதுடில்லி, சூலை 2—

இந்தியப் பேரரசின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மேலும் அதிகப் பணம் தேவைப்படுகிறதாம்! முன்பு மதிப்பிடப்பட்டதைவிட இப்போது தேவைப்படும் தொகை அதிகரித்துள்ளதாம்! துவக்கத்தில் ரூ. 4,800 கோடியாக இருந்த முதலீடு, பல காரணங்களால் ரூ. 5,500 கோடியாக மாறியது; இப்போது ரூ. 6,000 கோடிக்குமேல் உயரக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அந்நிய நாணயச் செலாவணியின் சங்கமான நிலைமை, உள்நாட்டில் உள்ள விலைவாசி உயர்வு ஆகியவை காரணமாக திட்டத்திற்கான செலவு அதிகரிக்கக் கூடுமென்று பண்டித நேரு மாநில அமைச்சர்களுக்கு சென்ற திங்களில் மடல் வரைந்துள்ளாராம்.

திட்டக் குழுவின் பரிசீலனைக்குப் பின்னரே மாநிலங்கள் தங்களுடைய திட்டங்களை நிறைவேற்ற முனைய வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளாராம்.

திட்டம் எவ்வளவு சிறந்ததாக இருப்பினும் மாநில அரசாங்கம் திட்டக் குழுவை கலந்தாலோசித்தே முடிவு செய்ய வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டுள்ளாராம்.

இரண்டாவது திட்டம் மொத்தம் ரூ. 6,000 கோடிவரை உயரக்கூடுமாதலால், இந்தியா இவ்வளவு பெரிய தொகையை தாங்க முடியாது என்பதே இதற்குரிய காரணமாம்.

ஆடுவோர் யார்—ஆட்டிவைப்போர் யார் என்பதும், திட்டத்திற்கான நிதிவசதி எந்த அளவில் உள்ளது என்பதும், மாநிலங்களுக்கு அனுப்பியுள்ள பண்டித நேருவின் உத்தேச தாக்கீதை சரிவரப் புரிந்துகொள்பவர்கட்கு நிச்சயம் விளங்காமல் போகாது.

நெல்லைமாவட்ட தி.மு. கழகக் கிளைகளுக்கு

வேண்டுகோள்

"23—6—57-ல் தூத்துக்குடியில் நடைபெற்ற நெல்லை மாவட்டச் செயலாளர் தேர்தலில் மாவட்ட உறுப்பினர்கள் என்னைச் செயலாளராக தேர்ந்தெடுத்திருப்பதை அறிந்திருப்பீர்கள்.

"அதன்படி, மாவட்டக் கழக அலுவல்களை (தற்காலிகமாக) சங்கரன்கோவிலில் இயங்கிவர ஏற்பாடுகள் செய்திருக்கிறேன்.

"ஆகையால் நெல்லை மாவட்ட தி. மு. கழகக் கிளைகள் மாவட்ட சம்பந்தமான தொடர்புகளை, "டி. ஆர். சுப்பிரமணியம், செயலாளர் நெல்லை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம், சங்கரன்கோவில்" என்ற முகவரிக்கு ஏற்படுத்திக்கொள்ள வேண்டுகிறேன்."

என்று மாவட்டச் செயலாளர் டி. ஆர். சுப்பிரமணியம் அறிவிக்கிறார்.

'நாட்டில் தோழமை வளர கல்வியின் அடிப்படையில் மாற்றம் தேவை'

'காங்கிரசார் பதவியேற்று பத்து ஆண்டுகளாகியும் சாதி வேற்றுமைகள் இருப்பதேன்?

ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ. முழக்கம்

29—6—57 அன்று மாலை சென்னை—கோடம்பாக்கத்திற்கருகிலுள்ள விருகம்பாக்கத்தில் தோழமைக் கழகத்தைத் துவக்கி வைத்து, தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ. அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

"பொதுவாக இத்தகைய கழகங்கள், அந்தந்தப் பகுதி மக்களின் தேவைகளை அறிந்து, அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் துவக்கப்படுகின்றன. அதேபோல, நமது நாட்டின் தேவைகளை அறிந்து அவைகளுக்காகச் செயலாற்ற திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபட்டு வருகிறது. அந்த முறையிலே இந்தத் தோழமைக் கழகத்தைத் தோழர்கள் இங்கே ஆரம்பிப்பது நல்ல ஒரு முயற்சியாகும்.

"தலைவர் பேசும்போது, 'காங்கிரஸ்காரர்களும் இதில் சேரலாம்; மக்களிடம் தோழமை வளருவதற்கு இதில் சேர்ந்து பணியாற்றலாம்' என்று சொன்னார். ஆனால், இதில் காங்கிரஸ்காரர்கள் சேரமாட்டார்கள்; காரணம் அவர்களுக்கு மக்களுடைய தோழமை தேவையில்லை; எப்பொழுது அவர்களுக்கு மக்களின் தோழமை தேவையென்றால், தேர்தல் சமயத்தில்தான் — மக்களின் ஓட்டுகளை வாங்குவதற்குத்தான் தேவைப்படும். இப்போது தோழமை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற பொறுப்பு அவர்களுக்குக் கிடையாது.

"பொறுப்பில்லாத அரசாங்கம் இந்த நாட்டில் நடக்கும்போது நாட்டில் தோழமையைப் பற்றி மக்களிடம் சொல்லி, அதைச் செயலாற்ற ஒரு கட்சி—கழகம் இருந்தால் தான் முடியும். எனவே, பொது மக்கள் இம்மாதிரி கழகங்களில் தங்களுக்கு ஏற்படும் குறைகளைச் சொல்லி, அதன்மூலம் தங்கள் குறைகளை நிவர்த்தித்துக்கொள்ள முடியும்.

"பொதுவாக அரசாங்க அதிகாரி ஒருவர் ஒருவருக்கு தொல்லை தருகிறார் என்றால், அந்த அதிகாரியை எதிர்த்துக் கேட்க—கண்டிக்க அந்தத் தனி நபரால் முடியாது. அப்படி எதிர்த்துக் கேட்டால், அந்த அதிகாரி, தன்னிடமுள்ள அடக்குமுறையால் அவரை அடக்கிவிடுவார் அதனால், இம்மாதிரி சங்கங்கள் இருந்தால், அதிகாரிகளால் ஏற்படும் தொல்லைகளைக் கண்டிக்க முடியும்; எதிர்த்துக்கேட்க முடியும். ஆகையினால் இம்மாதிரி சங்கங்கள் மிக அவசியமாகும்.

"அதிகாரிகள் தனியாகக் கேட்கும் மக்களை அடக்கினால், மக்களும் அடங்கிவிடுவார்கள்; ஆனால் ஒரு கட்சியோ, கழகமோ அந்த அதிகாரியை எதிர்த்துக் கேட்கப்போனால், அந்தக் கட்சியின் மீதோ, கழகத்தின் மீதோ, அடக்குமுறையைக் கையாளமுடியாது. அப்படி அதை அடக்கினால் அது அடங்காது; யாருக, கிளர்ச்சி எழும்; அந்த கிளர்ச்சி வெகு விரைவில் வளர்ச்சிபெறும்; பொங்கியெழும். அதனாலேதான் மக்கள் தங்கள் குறைகளை நீக்கிக்கொள்ள இம்மாதிரி கழகங்கள் தேவை என்கிறேன்.

"நாம் தேர்தல் முடிந்தும் இன்னும் இம்மாதிரிக் கூட்டங்களில் பேசிக்கொண்டிருப்பதற்குக் காரணம், நாட்டு மக்களுக்கு சேவைசெய்யத்தான்; வேறொன்றையும் எதிர்பார்த்தல்ல! ஆனால், மற்றக் கட்சிக்காரர்களுக்கு சம்பளம் உண்டு; நாம் அப்படிச் சம்பளம் வாங்கி சேவை செய்வதில்லை. தி. மு. கழகம் எந்த ஒரு ஆதாரத்தையும் நம்பி வேலை செய்யவில்லை. அது தன்னுடைய இலட்சியத்திற்காகப் பாடுபடுகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தில் பணியாற்றுகிறவர்கள் தங்களுக்காகக் கழகத்தில் ஒரு செல்லாக் காசுகூட எதிர்பார்க்கவில்லை; அல்லது ஏதாவது உள்நோக்கம் வைத்தும் நாம் பாடுபடவில்லை. எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தில் யோக்கியர்கள் அனைவரும் சேர விரும்பி முன்வருகிறார்கள்.

"அதேபோல, பொதுமக்களும் இக்கழகத்தில் சேரலாம்; சேர்ந்து இவர்களிடம் தங்கள் குறைகளைச் சொன்னால், அவர்கள் எங்களிடம் சொல்லுவார்கள்; அந்தக் குறைகளைப் போக்கிக்கொள்ள அனைவரும் சேர்ந்து பணியாற்றலாம்.

"தோழமை ஒரு நாட்டுக்கு மட்டும் தேவை என்பதல்ல; அது எங்கும் தேவை. ஆனால், தோழமை இந்த நாட்டில் இருக்கிறதா என்றால், இல்லை; இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிறதா என்றால், இல்லை; உலகத்தில் இருக்கிறதா என்றால் இல்லை. எங்கேயும் தோழமையில்லை. அப்படி தோழமை இருந்திருந்தால் உலகத்தில் ஏன் அமைதியில்லாமல் இருக்க வேண்டும்? ஏன் சிறிய சிறிய நாடுகள் பிரியவேண்டும்? இந்த நாட்டிலே இத்தனைக் கட்சிகளுக்கும் தேவையிருக்காதே!

"அப்படி தோழமை ஏன் ஏற்படவில்லையென்றால், நாட்டில் ஒருவனை ஒருவன் அழுத்தப் பார்க்கிறான்; ஒருவனை ஒருவன் விழுங்கப்பார்க்கிறான். ஒரு நாட்டை ஒருநாடு அடிமைப்படுத்த நினைக்கிறது. எனவேதான், தோழமை எங்கேயும் வளரவில்லை.

"இந்த நாட்டில் பார்த்தாலே தெரியும்; புகை வண்டி நிலையத்தில் ஒருவன் பலகாரங்கள் விற்றுக்கொண்டிருப்பான்; அதைப் பார்த்து சில குழந்தைகள் ஆசையாகக் கேட்கும்; ஆனால் குழந்தையின் தாய், 'வேண்டாம்; அவன் கீழ் சாதிக்காரன்—அவன் அதை விற்கிறான்; நாம் சாப்பிடக் கூடாது' என்று சொல்லுவாள். ஏன்? பச்சைக் குழந்தையிலிருந்தே அதனிடம் துவேஷ மனப்பான்மையை வளர்க்கிறார்கள். எப்படி தோழமை வளர முடியும்?

"அதனால், தோழமை நாட்டில் ஏற்படவேண்டுமானால், சிறிய வயதிலிருந்தே தோழமை உணர்ச்சியை ஊட்டவேண்டும். அதற்குக் கல்வியின் அடிப்படையிலேயே மாற்றி அமைக்கவேண்டும். மேலை நாடுகளில் ஆண்—பெண் என்ற வித்தியாசமின்றி கல்வி அளிக்கிறார்கள்; மாணவர்களும் மாணவிகளும் படிக்கிறார்கள்.

"ஆனால், இங்கோ ஆண்—பெண் என்று பிரித்தல்லவா கல்வி அளிக்கிறார்கள்? அப்படி ஆண்—பெண் வேற்றுமையின்றி இருக்கவேண்டும். ஆனால் கல்வியிலேயே பிரித்துவைக்கிறார்களே! அப்படி இருக்கலாமா? 'ஏன்' என்று கேட்டால், 'ஆண்-பெண், ஒன்றாகப் படித்தால் கெட்டு விடுகின்றனர்' என்று சொல்லுகிறார்கள். கெடுவது பள்ளிக்கூடத்தில்தானா? வேறு எங்கேயும் கெடுவதில்லையா? தேர் திருவிழாக்களில் கெடுவதில்லையா? பண்டிகைகளுக்குச் செல்கிறார்களே, அங்கே கெடுவதில்லையா? கோயில்களுக்குச் செல்கிறார்களே, அங்கே கெடுவதில்லையா?

"கெடுவது என்பது ஒன்றும் கிடையாது; பெயரிடுவதுதான் கெடுவது என்பது. இம்மாதிரி வேற்றுமைகள் இல்லையென்றால், கெடுவது என்ற ஒன்றே ஏற்படாதே!

"தமிழன் அடிப்படையில்—தன் வாழ்க்கையில், சாதிப் பிரிவினைகள் இல்லாமல் வாழ்ந்தான். ஆனால் இப்பொழுது பாரதி பாடி வைத்திருக்கிறாரே, 'ஆயிரம் உண்டிங்கு சாதி' என்று! ஆயிரம் சாதிகள் இருக்கின்றனவே, எப்படி தோழமை வளரமுடியும்?

"எல்லோரும் 'பாரதமாதா'வின் குழந்தைகள் என்று சொன்னார்கள்; ஆனால் கோயிலில் ஒரு சாரான் சென்றால், 'நுழையாதே! நீ தீண்டப்படாதவன்!' என்று சொல்லப்படுகிறதே, ஏன்? 'பாரதமாதா'வின் குழந்தைகள் என்பதெல்லாம் சொல்லளவில்தானா? அது செயலளவில் இருக்கக்கூடாதா?

"ஆனால், சாதிப் பிரிவினைகளை நீக்க, திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் செயலளவில் காட்ட தன் கொள்கைகளை வைத்திருக்கிறது. இந்த நாட்டில் தோழமை வளர முதலில் சமுதாய சீர்திருத்தம் வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கூறுகிறது.

"காங்கிரஸ்காரர்கள், ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் இந்த நாட்டில் ஆண்டபோது, நாம் 'பிராமணீயம் ஒழிக!' என்று சொன்னபோது, நம்மை 'சாதித் துவேஷிகள்' என்று சொன்னார்கள்; 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் உடனே சாதிப் பிரிவினைகளை நீக்கிவிடுவோம்' என்றார்கள்; இப்பொழுது அதிகாரத்திற்கு வந்து 10 ஆண்டுகள் ஆகியும் ஏன் சாதிப் பிரிவினையை நீக்கவில்லை? அதன் அர்த்தம் என்ன? அன்று சொன்னார்கள் என்றாலும், அதிகாரத்தினால் மட்டுமே மாற்றிவிடமுடியாது என்று அர்த்தம்; அவர்கள் முன்பு சொன்னது தவறு என்று அர்த்தம்.

"ஆனால் நாம்தான் முதலில், சமுதாயத்தைத் திருத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு எல்லா மக்களோடும் சாதாரணமாகப் பழகி, சமுதாயச் சீர்

(4-ம் பக்கம் பார்க்க)

சென்னையில் தடை உத்திரவு நீடிக்கிறது

சென்னை, ஜூலை 3—

சென்னை நகர எல்லைக்குள் போலீஸ் கமிஷனரின் முன் அனுமதி இல்லாமல் கூட்டம் நடத்தவோ, ஊர்வலம் நடத்தவோ கூடாதென விதிக்கப்பட்டிருக்கும் தடை உத்திரவு ஜூலை 17-ந் தேதி வரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

'நியாயமான சனநாயக முறையை நாங்கள் பின்பற்றக் கூடும்'

'மக்களின் எண்ணத்தை மாநிலத்திற்கு வெளியிலுள்ளவர்களும் அறியச் செய்வோம்'

டில்லியின் முடிவுக்கெதிராக சட்டசபை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 'நடவடிக்கை'

ஷில்லாங், ஜூலை 1—

எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை அசாமில் அமைக்கவேண்டும் என்று கோரி, மாநில சட்டசபை நிறைவேற்றிய தீர்மானத்தைப் புறக்கணித்து, இந்தியப் பேரரசு மேற்படி தொழிற்சாலையை வேறு இடத்தில் நிறுவ முடிவு செய்திருப்பதை ஆட்சேபித்து, அசாம் சட்டசபையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இன்றைய சட்டசபைக் கூட்டத்திற்கு வரவில்லையாம்!

எதிர்க்கட்சியினரின் சார்பில், பி. சோ. கட்சியின் பிரதம கொரடாவான இராலால் பட்வாரி மட்டும் சபைக்குச் சென்று, தங்கள் முடிவுக்கான காரணத்தை விளக்கியுள்ளார்.

"மத்திய அரசாங்கத்தின் போக்கைக் கண்டிக்கவும், மக்களின் விருப்பத்திற்கு விரோதமாக டில்லி எதேச்சாதிகாரமாக முடிவு செய்துள்ளதை அம்பலமாக்கவும், மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கவும், அது, இந்த மாநிலத்திற்கு வெளியே உள்ளவர்களுக்குத் தெரிய வேண்டுமென்பதற்காகவும் நாங்கள் இன்றும் நாளையும் சட்டசபைக்கு வருவதில்லை என முடிவு செய்துள்ளோம். அசாமில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற மக்களின் உறுதிப்பாட்டின் காரணமாக எத்தகைய நியாயமான சனநாயக முறையையும் நாங்கள் பின்பற்றக் கூடும்" என்று அவர் கூறிவிட்டு சபையிலிருந்து வெளியேறினர்.

அதிகாரி நியமனத்தில் அரசாங்கத்தின் தீவிரம்

சிக்கன முறைகளை ஆராய சென்னையின் முயற்சி

சென்னை, ஜூலை 3—

சென்னை அரசாங்கத்தின் நிர்வாக இலாகாவின் அமைப்பை ஆராய்ந்து, அவசியமான மாற்றங்களைப் பற்றி அறிவிக்கவும், ஊழியர்களின் எண்ணிக்கையை மதிப்பிட்டுக் கூறவும், சிக்கனத்துக்கான வழிவகைகளை எடுத்துரைக்கவும் திரு. டி. என். எஸ். இராகவன் அவர்களை இதற்கான அதிகாரியாக சென்னை அரசாங்கம் நியமித்துள்ளதாம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்—அறிக்கை எண்: 7/57

ஜூலை-7 ஞாயிறு

பாராளுமன்ற உறுப்பினரிடம் முறையிடும் நாள்

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாழும் ஊர்களைச் சார்ந்த தி. மு. க. கிளைத் தோழர்களும், ஆதரவாளர்களும், **7-7-57** ஞாயிற்றுக்கிழமையைப் பாராளுமன்ற உறுப்பினரிடம் புதிய வரி விதிப்புப்பற்றி முறையிடும் நாளாகக் கொண்டு, அன்று அந்தந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் ஊர்களில் பொதுமக்களுடன் ஊர்வலமாகப் பாராளுமன்ற உறுப்பினர் இருக்கும் இல்லத்திற்குச் சென்று, முறையீட்டின் நகலை அவரிடம் கொடுத்துவிட்டு, உடன் பொதுக்கூட்டத்தில் தீர்மானத்தை நிறைவேற்றி விளக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேம். பாராளுமன்ற உறுப்பினர் இல்லத்திலோ அல்லது ஊரிலோ இல்லாவிட்டால், அவர்கள் இல்லத்திலுள்ள வேறு முக்கியமானவரிடம் முறையீட்டின் நகலைக் கொடுத்து உரியவரிடம் சேர்ப்பிக்குமாறு கூறக் கேட்டுக்கொள்கிறேம்.

இந்திய அரசியலார் விதித்திருக்கும் புதிய வரிகளையும், கட்டண உயர்வுகளையும் பொதுமக்கள் விரும்பவில்லை—எதிர்க்கிறார்கள் என்பதையும், பாராளுமன்றம் சென்றுள்ள உறுப்பினர்கள் அவற்றை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் போராடவும், வாக்களிக்கவும் வேண்டும் என்று பொதுமக்கள் விரும்புகிறார்கள் என்பதையும் பொதுக்கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றவும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் ஊரில் மட்டும் இந்த ஏற்பாடுகளைச் செய்தால் போதும். அந்தந்தப் பாராளுமன்றத் தொகுதியிலுள்ள தோழர்கள் அந்தந்தத் தொகுதிக் கூட்டத்தில் கலந்துகொள்ள முயற்சி எடுக்கவும்.

கட்டுப்பாடுடன், அமைதி குலையாத வகையில் ஊர்வலங்களையும் பொதுக்கூட்டங்களையும் நடத்தவும்.

ஊர்வலத்தின் மூலம் முறையிட வருவதை முன்கூட்டியே அந்தந்தப் பாராளுமன்ற உறுப்பினருக்குப் பணிவன்போடு தெரிவித்துவிடவும்.

21—6—57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஆசைத்தம்பி முழக்கம்

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கைகளைக் கூறிவருகிறோம். ஒரு 10 ஆண்டு காலத்திற்கு முன் இருந்த நிலையை எண்ணிப் பாருங்கள்! ஒரு கட்டடத்திற்கு பட்டைபட்டையாக சாயம் பூசி யிருப்பார்கள். அந்தப் பக்கம் வரும் இந்த நாட்டுக் குடிமகன், கட்டிடத்தை பார்த்ததும், தன் காலில் அணிந்திருக்கும் செருப்பைக் கழற்றி தன்னுடைய 'கக்க'த்தில்வைத்துக்கொள்வான் தனது மேல் துண்டை இடுப்பில் கட்டிக்கொள்வான். 'எனப்பா, இவ்வளவு பயபக்தி?' என்றால், 'அதோ கோயில்,' என்பான். அப்பொழுது நாம் அவனைப் பார்த்து—அவன் பயப்படும் சாமி உருவத்தைக் காட்டி, 'என் பயப்படுகிறாய்?'—என்று கேட்டோம். அவன் 'ஐயோ! 'சாமி' கையை வாங்கிவிடும்—காலை வாங்கிவிடும்' என்று, சொல்லி பயந்தான். பின்னர்தான் நாம், 'சாமியே கிடையாது,' என்று சொன்னோம். மேடைகளிலே சாமியைப் பற்றிய ஆபாசங்களை நல்ல முறையிலே எடுத்துச் சொன்னோம். அப்பொழுது அவன் பார்த்தான்—'என்ன, இவர்கள் மேடைகளில் சாமியைப் பற்றி இவ்வளவு பேசுகிறார்கள்; இவர்களை சாமி ஒன்றும் செய்யவில்லையே! அப்படியென்றால் சாமி என்பது ஒன்றும் கிடையாது போலிருக்கிறது,' என்று எண்ணி எண்ணி, அவனுடைய மூடநம்பிக்கையைக் குறைத்துக் கொண்டான். பத்து வருடத்திற்கு முன்பு கோயில்முன் செருப்புப் போட்டு நடப்பதற்குப் பயந்த நிலையை இப்பொழுது பார்க்கமுடியுமா? இப்பொழுது சாமியைப் பற்றிக் கொஞ்சம்கூட கவலைப்படாமல் அல்லவா மக்கள் இருக்கிறார்கள்?

"அந்த அளவுக்கு மக்களை மாற்றியது திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான். இப்பொழுது மக்கள் ஓரளவுக்கு சமுதாயத்துறையிலே பக்குவம் பெற்றுவிட்டார்கள். எனவே தான், திராவிட முன்னேற்றக் கழகம், 'ஒன்றே குலம்—ஒருவனே தேவன்,' என்றும் தன் கொள்கையை கூறிவருகிறது. சமுதாயத்திற்கு உண்மையாக உழைப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் இருக்கிறது. அதைச் சார்ந்த இத்தோழமைக் கழகமும் நல்ல முறையிலே பயன்படும். இப்பொழுதிலிருந்தே உங்களுடையத் தேவைகளுக்காக இக்கழகத்தில் சேர்ந்து வேலை செய்தால் எதிர்காலம் நிச்சயம் நிலைமை நல்ல முறையிலே வளரும்."

கருணாநிதி முழக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"முடிவுகளை உண்டாக்கக் கூடிய முடியுடை மூவேந்தர் பரம்பரை, வடக்கு நோக்கி வரம் கேட்டு எதிர்பார்த்து நிற்கிறது, இப்போது!

"திரு. க. சந்தானம் அவர்களைத் தலைவராகக் கொண்ட நிதிக் கமிஷனிடம் மாநில அரசு முறையிட்டு இருப்பதையும் அமைச்சர் அறிக்கை வேதனையோடு குறிப்பிடுகிறது:—

'மத்திய வரி இனங்களில் நமக்கு அதிக விகிதம் கிடைக்க வேண்டிய நியாயத்தையும் விளக்கியுள்ளோம்.'

'நாம் கூறியுள்ள யோசனைகளில் அடங்கியுள்ள முறைகளையேனும் நிதிக்கமிஷன் ஒத்துக்கொள்ளும் என நம்புவோமாக!'

'நாம் பெரும்பாலும், எஞ்சியுள்ள தொகைக்கு மத்திய அரசாங்கத்தையே நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. ஆனால் இந்த உதவி போதிய அளவில் கிடைக்குமென்ற உறுதி இன்னும் கிடைக்கவில்லை. ஆயினும் சிக்கல்கள் எழும்போது அவைகளை எப்படியும் சமாளித்துக் கொள்வோம் என்ற உறுதியில் முன் செல்வோமாக!

"'சமாளிப்போம்,' என்று நிதி அமைச்சர் சங்கடத்துடன் கூறுகிறாரே தவிர, 'எதிர்த்துப் போராடி உரிமையைப் பெறுவோம்,' என்ற உத்வேகம் காணப்படவில்லை!

"அசாம் மாகாணத்து எழுச்சி சென்னை மாநிலத்துக்கு இல்லாமற் போவானேன்? 'எண்ணெய் தொழிற்சாலை 'ஏகபாரத்'தில் எங்கிருந்தால் என்ன? பீகாரில் தான் இருந்து விட்டுப்போகட்டுமே!,' என்ற பெருமனது (?) அசாமுக்கு வரவில்லை. வீறு பெற்று எழுந்து, மந்திரிகள், இராஜிநாமாக்களை வீசியெறியத் தயாராகிவிட்டனர்! தேபர் தேறுதல் கூறியும் அசாம் கொந்தளிப்பு அடங்கிய பாடில்லை! அசாம், அந்நிய நாடுமல்ல; கேரளத்தைப்போல் கம்யூனிஸ்டு மந்திரிகள் ஆளுகிற நாடும் அல்ல; காங்கிரஸ் மந்திரிகளேதான் மத்திய சர்க்காரைத் துணிவுடன் எதிர்க்கிறார்கள்!

'அந்தத்துணிவுடைமைஇங்கே இல்லை!

'தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன் ஆள்பவர்க்கு!'

என்றார் வள்ளுவர். திருக்குறள் மலிவுப் பதிப்பு வெளியிடப்படும் இந்தச் சமயத்திலாவது குறள் வழி நடந்து நாடாள முனைய வேண்டும் நமது அரசினர் எனக் கூறி, வரவு-செலவுத் திட்டத்தில் எனக்குள்ள அதிருப்தியைத் தெரிவித்து என் உரையை முடிக்கிறேன்."

சென்னை—மகளிர் மன்றம்

"6—7—57 சனி மாலை 5-மணிக்கு மன்ற அலுவலகத்தில் மன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது, 'பெண்களுக்குப் போலீஸ் பதவி அவசியமா?' என்ற பொருள்மீது சொற்போர் நடைபெறும். மன்ற உறுப்பினர்கள் இதனையே அழைப்பாகக் கொண்டு சொற்போரில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்." என்று மகளிர் மன்றத் தலைவர் தோழியர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ. அவர்கள் அறிவிக்கிறார்.

மயிலை—சவுந்திரபாண்டியனார் படிப்பக பொது உறுப்பினர்கட்கு:

6—7—57 இரவு 9-மணிக்கு படிப்பகத்தின் அலுவலகத்தில் மேற்படி பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது பல முக்கியப் பிரச்சினைகள் குறித்து முடிவெடுக்கப்படும்.

திண்டிவனம் தி. மு. க.
மாணவர் கிளை பொதுக்கூட்டம்

6—7—57 மாலை 6½ மணிக்கு, திண்டிவனம் தி. மு. கழக மாணவர் கிளையின் சார்பில், காந்தித் திடலில் (மூன்று ராந்தல்), தோழர் க. வே. பாண்டியன் அவர்கள் தலைமையில் ஓர்பொதுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது தோழர்கள் இரே. இளம்வழுதி, முகவை ஆர். எஸ். பாண்டியன், எம். ஏ. சண்முகம், மாணவர் 'கொள்கைக்கோ', கு. பாலன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

விற்பனைக்குத் தயார்!

கவிஞர் கண்ணதாசன்
அவர்கள் எழுதிய

"உயிர் ஓவியங்கள்"

★

விலை ரூபாய் ஒன்று—விற்பனைக் கழிவு 25 சதவிகிதம்
தபால் செலவு இனாம் — தேவைக்கு முந்துங்கள்.

பி. இராமசாமி அண்டு பிரதர்ஸ்
98/7 டாக்டர் நடேசன் ரோடு, சென்னை-4

மேலும் வரி விதிக்க வேண்டுமாம்! வரி தர மக்கள் தயாராக இருக்கிறார்களாம்!

அதிக வரிகள் விதிக்காததற்கு காங்கிரசு உறுப்பினர் வருந்துகிறார்!

சென்னை, ஜூலை 2—

இன்று சட்டசபையில் வரவு-செலவுத் திட்டத்தின்மீது நடைபெற்ற விவாதத்தின்மீது, பல சட்டமன்ற உறுப்பினர்கள் பேசினர்; குறிப்பாக திரு. என். எஸ். ராமலிங்கம், திரு. முத்தையா பிள்ளை, திரு. எம். ஏ. முத்தைய செட்டியார், திருமதி சௌந்தரம் இராமச்சந்திரன் ஆகிய காங்கிரஸ் உறுப்பினர்களும், எஸ். ஆர். முனுசாமி (ஷெட்யூல் வகுப்புப் பிரதிநிதி) ஆகியோரும் பேசினர்.

திரு. என். எஸ். இராமலிங்கம் பேசுகையில், பொது இடங்களில் சாதியைக் குறிக்கும் சொற்கள் பயன்படுத்தப்படக்கூடாது என்றும், இதைத் தடுக்க சர்க்கார் சட்டம் கொண்டுவர வேண்டும் என்றும், வேதாரண்யம் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் உப்பை, 'டேபிள் சால்ட்' (சுத்திகரிக்கப்பட்ட உப்பு)டாக மாற்றும் தொழிற்சாலை ஒன்று அப்பகுதியில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

திரு முத்தையா பிள்ளை (சஞ்சை) பேசுகையில், சர்க்கார் புதிய வரிகள் போடாததற்கு தான் வருந்துவதாகவும், புதிய வரிகள் விதித்து, அதிக பணம் திரட்டப்பட வேண்டும் என்றும், அப்பொழுது தான் மக்களுக்கு நன்மை செய்ய முடியுமென்றும், மக்கள் வரி செலுத்தத் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

மேலும் அவர், 'தர்ம ஸ்தாபனங்களில் தேங்கி இருக்கும் செல்வத்தை சர்க்கார் எடுத்து, அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்த சட்டம் கொண்டுவர வேண்டும்,' என்றார்.

திருமதி சௌந்தரம் இராமச்சந்திரன் (வேடசந்தூர்) பேசுகையில், சர்க்காருக்கும், பொது மக்களுக்கும் இடையே நேரடித் தொடர்பு ஏற்படவேண்டும் என்றும், தற்பொழுது நிர்வாகம் மிக மெதுவாக செயல்படுவதாகவும் குறிப்பிட்டார்.

திரு. எம். ஏ. முத்தைய செட்டியார் (காரைக்குடி) பேசுகையில், பற்றுக்குறை பட்ஜெட் தயாரிப்பதை தான் ஆதரிப்பதாகவும், ஆனால், தற்பொழுதுள்ள பட்ஜெட்டில் துண்டுவிழும் தொகையான 4¼ கோடிக்கு வரி விகிதம் உயர்த்தப்படாமலேயே, டில்லி சர்க்காரிடமே பெற்றுக்கொள்ள முயன்று இருக்கலாம் என்றும் கூறினார்.

திரு. எஸ். ஆர். முனுசாமி பேசுகையில், தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகத்தில் மிகக் கீழான நிலையில் உள்ளனர் என்றும், அவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகைக்கு நன்றி செலுத்துவதாகவும், ஆனால் அதே நேரத்தில் அவர்களுக்காக ஒதுக்கப்படும் தொகை அவர்கள் நலனுக்காகப் பயன்படாமல் அதிகாரவர்க்கத்திலுள்ளவர்களுக்கே பயன்பட்டு வருகிறது என்றும், இதைத் தடுத்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நேரடியாக அத்தொகை பயன்படுமாறு செய்யவேண்டும் என்றும் கூறினார்.

ரஷ்யாவில் 4 தலைவர்களுக்குக் 'கல்தா'

கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமைப் பொறுப்பை இழப்பர்!

ஸ்டாலினிசத்தில் விடாப்பிடிப்பு கொண்டிருந்ததே குற்றமாம்

லண்டன், ஜூலை 3—

வழக்கம்போலவே எதிர்பாராதவகையில், ரஷ்யத் தலைமை, உடனிருக்கும் பிரதானிகளில் சிலரை, அவர்கள் வகித்துவந்த பெரும் பொறுப்புகளிலிருந்து தூக்கி எறிந்துள்ளது பற்றித் தகவல் தரப்படுகிறது.

மாலடோவ், மாலங்கோவ், காகனோவிச் ஆகிய மூவரையும் கட்சியின் முன்னைய பொலிட்பீரோவும், இன்றைய பிரிசிடியமுமான உயரிய அரசியல் குழுவிலிருந்து கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி நீக்கியிருப்பதாக மாஸ்கோ வானொலி தெரிவித்திருக்கிறதாம்.

இந்த பிரிசிடியம் என்ற உச்ச அமைப்பில் 11 உறுப்பினர்கள் உண்டு; அத்துடன் ஆறு பேர்கள் ஓட்டுரிமை இல்லாத உறுப்பினர்களாயிருக்கின்றனர்.

மாலங்கோவ், மாலடோவ் ஆகியோர் பிரிசிடியத்தின் முக்கிய உறுப்பினர்களாவர்.

காகனோவிச், மாலடோவ் ஆகியவர்கள் முதல் உதவிப் பிரதம மந்திரிகளாயிருப்பவர்கள்; காகனோவிச், கட்டிட நிர்மாணச் சாதனங்கள் இலாகா மந்திரியாகவும் இருந்து வருகிறார்.

மாலங்கோவ், முன்பு ரஷ்யப் பிரதம மந்திரியாகவுமிருந்தவர்; இப்போது, உதவிப் பிரதமர் மற்றும் மின்சார உற்பத்தி இலாகா மந்திரியுமாவார்.

நான்காவதாக, பிரிசிடியத்தில் ஓட்டுரிமையில்லாத உறுப்பினராயிருக்கும் ஷெப்பிலாவ், கம்யூனிஸ்டுக் கட்சியின் செயலாளர் பொறுப்பிலிருந்தும் நீக்கப்பட்டிருக்கிறார் என்றும் வானொலி அறிவிப்பு கூறியுள்ளதாம்.

இவர்கள் இப்படித் தண்டிக்கப்பட்டிருப்பதற்குக் காரணம், இவர்கள் அனைவரும் 'ஸ்டாலினிச'த்தில் இன்னும் பிடிப்பு கொண்டவர்களாக இருந்துகொண்டு, தவறான கருத்துக்களைப் பரப்பி வருவதாகவும், ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 20-வது காங்கிரசின் தீர்மானத்தை ஏற்க மறுப்பதும் தான் என்றும் கூறப்படுகிறது.

இவர்கள் பிரிசிடியத்திலிருந்து நீக்கப்படுவதினாலேயே, வகித்து வரும் மந்திரிப் பொறுப்புகளையும் இழந்துவிடுவார்களா என்பது தெரியவில்லையாம்!

'பிராவ்தா' இதழும் தனது தலையங்கத்தில், இவர்களதுபோக்கினைக் கண்டித்து எழுதியுள்ளதாம்!

கழகக் கூட்டங்கள்

★

சென்னை-கோடம்பாக்கம்

சிங்காரவேலு கிராமணி திடல் கோடம்பாக்கம் பஸ்நிலைய அருகில் தி. மு. கழக 4-வது ஆண்டு விழா 6—7—57 மாலை 6 மணிக்கு

தலைவர்: சா. நெடுமாறன்

பேசுவோர்:

அண்ணா
க. அறிவழகன்
ஏ. எஸ். ஜேசுபாதம்
மா. செங்குட்டுவன்
பாடல்கள்: இராமச்சந்திரன்

வடசென்னை — தாளமுத்து நடராசன் முன்னேற்ற மன்ற 2-வது ஆண்டுவிழா

6—7—57 மாலை 6-மணிக்கு மேற்படி மன்றத்தின் 2-வது ஆண்டுவிழா, மீனாட்சியம்மன் பேட்டையில் (இராபின்சன் பார்க் அருகில்) தோழர் என். சிவரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெறும்; அதுபோது பேராசிரியர் க. அன்பழகன் எம்.எல்.ஏ., ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ. ஆகியோர்சொற்பொழிவாற்றுவர்

பொன்மலை — மேலக்கற்கண்டார் கோட்டை தி. மு. கழகப் பொது உறுப்பினர்களுக்கு:

6—7—57 மாலை 6-30 மணிக்கு, கழக இல்லத்தில், திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் அன்பில் தருமலிங்கம் தலைமையில், மேற்படி கிளையின் இடைக்காலத் தேர்தல் நடைபெறும்; பொது உறுப்பினர்கள் அனைவரும் வருகை தர கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

சென்னை-வண்ணைத் தொகுதி

தேர்தல் வழக்கு

6-7-57 காலை 11-மணிக்கு சென்னை உயர் நீதிமன்றத்திலுள்ள ஸ்மால்காஸ் கோர்ட் பிரதம நீதிபதி திரு. தாமோதரராவ் அவர்கள் முன்னிலையில் மேற்படி தேர்தல் வழக்கு நடைபெறும்.

தொ. சேடர்பாளையம்:
(சேலம் மாவட்டம்)
கே. வி. கே. சாமி திடலில்
6—7—57 மாலை 6 மணிக்கு
தலைவர்:
ஜி. பி. சோமசுந்தரம்
பேசுபவர்:
என். எஸ். இளங்கோ

★

நாகை:
அவுரித் திடலில்
5—7—57 மாலை 6½ மணிக்கு
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.
சி. ஜம்பு

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.